# யூலை – 15 – பொதுக்கால 15ம் வார ஞாயிறு

அவர் நம்மை இயேசுக்கிறிஸ்தவின் மூலம் தமக்கு சொந்தமான பிள்ளைகளாககிக் கொள்ள அன்பினால் முன் குறித்துவைத்தார்.'' (எபே. 1:5)

## முதல் வாசகம் : ஆமோஸ்7: 12 – 15

அந்நாட்களில் பெத்தேலின் குருவாகிய அமட்சியா ஆமோசைப் பார்த்து, ”காட்சி காண்பவனே, இங்கிருந்து போய்விடு. யூதாவின் நாட்டுக்கு ஓடிவிடு. அங்கே போய் இறைவாக்கு உரைத்து, உன் பிழைப்பைத் தேடிக்கொள்.பெத்தேலில் இனி ஒருபோதும் இறைவாக்கு உரைக்காதே. ஏனெனில், இது அரசின் புனித இடம், அரசுக்குரிய இல்லம்” என்று சொன்னான்.ஆமோஸ் அதற்கு மறுமொழியாக அமட்சியாவைப் பார்த்துக்கூறினார். ”நான் இறைவாக்கினன் இல்லை. இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனும் இல்லை. நான் ஆடு, மாடு மேய்ப்பவன், காட்டு அத்திமரத் தோட்டக்காரன். ஆடுகள் ஓட்டிக்கொண்டுபோன என்னை ஆண்டவர் தேர்ந்தெடுத்து, ”என்மக்களாகிய இஸ்ரயேலிடம் சென்று, இறைவாக்கு உரைத்திடுஎன்று அனுப்பினார்”.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்.

## இரண்டாம் வாசகம் : ஏபேசியர் 1 : 3 – 14

சகோதர சகோதரிகளே! நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றி! அவர் விண்ணகம் சார்ந்த, ஆவிக்குரிய ஆசி அனைத்தையும் கிறிஸ்து வழியாக நம்மீது பொழிந்துள்ளார்.நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின்மூலம் தமக்குச்சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்துவைத்தார். இதுவே அவரது விருப்பம். இதுவே அவரது திருவுளம். இவ்வாறு தம் அன்பார்ந்த மகன் வழியாக நம்மீது ஒப்புயர்வற்ற அருளைப் பொழிந் தருளியதால் அவரது புகழைப்பாடுகிறோம். கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள்வளத்திற்கு ஏற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார் இம்மீட்பால் குற்றங்களிலிருந்து நாம் மன்னிப்புப் பெறுகிறோம். அந்த அருளை அவர் நம்மில் பெருகச்செய்து, அனைத்து ஞானத்தையும் அறிவுத்திறனையும் தந்துள்ளார்.அவர் தமது திருவுளத்தின் மறைபொருளை நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இது கிறிஸ்து வழியாகக் கடவுள் விரும்பிச்செய்த தீர்மானம்.கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்கவேண்டும் என்ற திட்டமே அம்மறைபொருள்.கடவுள் தமது திருவுளத்தின் திட்டத்தின்படி அனைத்தையும் செயல்படுத்தி வருகிறார். அவரது தீர்மானத்தால் நாம் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்து வழியாய் அவரது உரிமைப் பேற்றுக்கு உரியவரானோம்.இவ்வாறு கிறிஸ்துவின்மேல் முதலில் நம்பிக்கை வைத்த நாங்கள் கடவுளுடைய மாட்சியைப் புகழ்ந்து பாட வேண்டுமென அவர் விரும்பினார்.நீங்களும், உங்களுக்கு மீட்பளிக்கும் நற்செய்தியாகிய உண்மையின் வார்த்தையைக்கேட்டு, அவர்மீது நம்பிக்கைகொண்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டீர்கள். அந்தத் தூய ஆவியே நாம் மீட்படைந்து உரிமைப்பேறு பெறுவோம் என்பதை உறுதிப்படுத்தும் அடையாளமாக இருக்கிறது. இவ்வாறு கடவுளது மாட்சியின் புகழ் விளங்கும்.

## நற்செய்தி : மாற்கு 6 : 7 – 13

அக்காலத்தில் இயேசு பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை இருவர் இருவராக அனுப்பத் தொடங்கினார். அவர்களுக்குத் தீய ஆவிகள் மீது அதிகாரமும் அளித்தார்.மேலும், ”பயணத்திற்குக் கைத்தடி தவிர உணவு, பை, இடைக்கச்சையில் செப்புக் காசு முதலிய வேறு எதையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போகவேண்டாம்.ஆனால் மிதியடி போட்டுக் கொள்ளலாம் அணிந்திருக்கும் அங்கி ஒன்றேபோதும்” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்.மேலும் அவர், ”நீங்கள் எங்கேயாவது ஒருவீட்டுக்குள் சென்றால், அங்கிருந்து புறப்படும்வரை அவ்வீட்டிலேயே தங்கியிருங்கள். உங்களை எந்த ஊராவது ஏற்றுக் கொள்ளாமலோ உங்களுக்குச் செவி சாய்க்காமலோ போனால் அங்கிருந்து வெளியேறும் பொழுது, உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்” என்று அவர்களுக்குக் கூறினார். அப்படியே அவர்கள் புறப்பட்டுச் சென்று மக்கள் மனம் மாற வேண்டுமென்று பறைசாற்றினார்கள். பலபேய்களை ஓட்டினார்கள் உடல் நலமற்றோர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினார்கள்.

**தியானம்:** இறையரசை அறிவிக்கின்ற பணியில் எம் ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற பொறுப்புக்களை உணர்ந்து கொள்ளவும். எமது அன்றாட வாழ்க்கை முறையால் அப்பணியை நிறைவேற்ற நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையும் இன்றைய இறைவார்த்தை பகுதிகள் எமக்கு தெளிவுபடுத்துகின்றன. முதல் வாசகத்தில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைவாக்கினரான ஆமோஸ் மெத்தலை விட்டு விரட்டப்படுகின்றார், ஆனாலும் ஆடு மேய்ப்பவரான ஆமோசுக்கு ஆண்டவரது தெரிவு இருந்தது மல்லாமல் காட்சி காண்பவராகவும் இருந்தார். தனக்கு காட்சியில் தெரிவிக்கப்பட்ட செய்தியை அறிவிப்பவராக இருந்தார். அவர் அறிவித்த செய்தி இஸ்ராயேல் மக்கள் வாழ்ந்த அருவருப்பான வாழ்வுக்கு எதிரானதாகவும் அது தொடர்ந்ததால் அவர்களுக்கு நேர இருந்த அழிவின் முன்னறிவிப்பாகவும் இருந்ததாகவும் அவர்கள் ஆமோசை ஏற்றுக் கொள்ள மறுத்து நகரைவிட்டு துரத்த முயற்சித்தார்கள். நற்செய்தியில் இயேசு தமதுசீடர்களை இறைவார்த்தை அறிவிப்பு பணிக்கு அனுப்புகின்றார். இங்கு அவர்களை வெறுங்கையராய் அனுப்பப்பட்ட போதும் அசுத்த ஆவியின் மேல் அதிகாரம் பெற்று செல்கிறார்கள். இது இறைவார்த்தைப் பணியில் ஈடுபடுவோருக்கு இருக்கவேண்டிய அடிப்படைத் தயார் நிலையாக இருக்கின்றது. குறிப்பாக திருமுழுக்கு பெற்றநாம் அனைவருமே இறைவார்த்தை அறிவிப்புப் பணிக்கு அனுப்பப்பட்டவர்களே. ஆயினும் சிறப்பாக நற்செய்தி அறிவுப்பணியில் நாம் ஈடுபாடுடையவர்களாக இருந்ததால் இவ்வுலகவாழ்விற்கு ஏதுவான அசுத்த ஆவியின் செயல்களிலிருந்து விடுபட்டவர்களாக இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித சின்னப்பர் குறிப்பிடுவது போல பரிசுத்த ஆவியின் முத்திரையை பெற்றுக் கொண்ட மக்களாக வாழ்வோம்.